# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

சுபானு ௵ புரட்டாசி மீ — OCTOBER 1943.



தருமபுரம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்தன்
நால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்கள்
உருகோட்டன் பொடுவணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| மலர் 2 | சுபானு௵ புரட்டாசிமீ OCTOBER 1943 | இதழ் 11 |
| --- | --- | --- |

இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


உள்ளுறை


1. பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்—

வித்துவா... ... M. வெங்கட்டராமையா அவர்கள், M.A., B.O.L.
...ாசிரியர், செங்கற்பட்டு. 32

2. சைவத்திருமுறைகள்

தருமபுர ஆதீனத்தமிழ்ப்புலவர், வித்துவான்,
திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், தமிழாசிரியர்,
சென்னை.

3. கந்தரலங்காரப் பொருட் சிறப்பு—

திரு. S. சிவபாதசுந்தரம், B. A., அவர்கள், யாழ்ப்பாணம்.

4. முப்பொருள்—

தருமபுர ஆதீனத்தமிழ்ப்புலவர், வித்துவான்,
திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், விரிவுரையாளர்
திருவையாறு.

5. Saiva Siddhantha — The Ambrosia.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்.

---

## 'பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்'

"இந்நாளில் திருப்பணிகள் செய்கின்ற இன்றுயிர்க்க
மன்றனை வாசகத் திருமுனியும் மதிச்சடைமேல்
பன்னகம் அணிந்தவர்தம் பதிபலவும் சென்றிறைஞ்சி
சொன்னமத் தமிழ்புனைந்து தொண்டுசெய்வான்
[தொடர்ந்தெழுவார்" -

என்ற இத் திருத்தொண்டர் புராணச் செய்யுளான் எங்கள் திருநாவுக்கரசர் தலயாத்திரை செய்யப் புறப் பட்டமை அறிகின்றேம். தலயாத்திரை செய்ய வெழுந் தவர் திருவதிகை மருங்குள்ள திருவெண்ணெய் நல்லூரும், திருவாமாத்தூர் திருக்கோவலூரும் ஆகிய திருப்பதிகளுக்குச் சென்று தமிழ்ப்பதிகங்களைப் பாடி, மிக்க விருப்புடன் திருப்பெண்ணாகடம் என்னும் திருப் பதியை அடைந்தனர். ஆங்குத் திருத்தூங்கானைமாடம் என்னும் திருக்கோயிலைச் சார்ந்தார்.

சார்ந்த எங்கள் அப்பர் சிவபரம் பொருளின் திருமுன் நின்று 'என்னுடைய நாயக! சமண் சமயத் தொடக்குண்டு போந்த இந்த உடலோடு உயிர்வாழத் தரியேன். அவ்வுடலோடுகூடி வாழ்வதற்கு உன் இலச்சினை (இடபமுத்திரையும், சூலமுத்திரையும்) இட்டருள்' என "பொன்னார் திருவடிக்கு ஒன் விண்ணப்பம்" என்று தொடங்கும் திருப்பதிகத்தில் அமைத்துப் பாடுதலும், சிவபிரான் திருவருளால் ஓர்பூதம் எவரும் அறியாதபடி வந்து வாகீசப் பெருமானின் இரண்டு தோள்களிலும் சூலமுத்திரையும், இடபமுத்திரையும் சாத்திச் சென்றது. சாத்துதலும், திருத்தோளில் விளங்கியிருந்த திருவிலச்சினையைக் கண்டு எங்கள் அப்பர்பெருமான் திருத்தூங்கானைமாடத்துச் சுடர்க் கொழுந்தீசரின் அடிபரவி, 'பிறவும் உடையவர்தம்பதி வணங்கும் விருப்பினுடன்' நீவாநதிக்கரையின் வழியே செல்லலுற்றார்.

திருப்பெண்ணாகடத்துப் பாடிய திருவிருத்தத்தால் மூவிலைச் சூலமும் இடபமும் பொறிக்க விண்ணப்பித்துக்கொண்டமை பெறுதும். இத்திருப்பதிகத்து மூன்று திருவிருத்தங்களேயுள்ளன.

முதல் திருவிருத்தத்துள் 'என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல், இருங் கூற்றகல மின்னாரு மூவிலைச் சூலம் என்மேற் பொறி' என்று வேண்டிக்கொண்டமை காணலாம். 'நமனை யஞ்சோம்' என்றருளினவரும், 'சமணப் பதகருடன் ஒன்றிய மன்னவன் சூழ்ச்சி, திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவரும்', 'மண் பாதலம் புக்கு ஏழ்கடல் மூடினும் அஞ்சல் நெஞ்சே' என்றவரும் ஆகிய வாகீசரது ஆவிக்கு நேர்ந்ததென்னை என்ற கேள்வி எழுக. அதற்கு விடையாக எங்கள் குன்றைமுனிவர் 'புன்னெறியாம் அமண்சமயத் தொடக்குண்டு போந்தஉடல்தன்னுடனே உயிர் வாழத் தரியேன்' என்ற அடிகளில் கூறியுள்ளனர்.

இரண்டாம் திருவிருத்தத்துத் 'திருவடிநீறென்னைப் பூசு' என்று விண்ணப்பித்துக் கொண்டார். திருவடித் துகள் தன்மேற்பூசுமாறு வேண்டுகிறார். அதாவது திருநீறு தன்மேற் பூசித் தன்னைச் சுத்தி செய்விக்க வேண்டுகிறார் எனக் கொள்ளலாம்.

மூன்றாம் திருவிருத்தமாகிய இப்பதிகத்து ஈற்றுச் செய்யுளில் 'இடபம் பொறித்து என்னை ஏன்று கொள்ளாய்' என்ற வேண்டுகோள் காணப்படுகிறது.

இத்திருப்பதிகத்து முதல் திருவிருத்தத்து ஈற்றடி 'துன்னார் கடந்தையுள் தூங்கானைமாடச் சுடர்க் கொழுந்தே' என்பது. 'கடந்தை' என்பது திருப் பெண்ணாகடம் என்பதன் மரூஉ. அம்மையின் திருநாமம் கடந்தை நாயகி என்றமையும் ஈண்டு குறிப்பிடுதல் அமையும். 'தூங்கானைமாடம்' என்பது திருப் பெண்ணாகடத்துப் பெருமான் எழுந்தருளிய கோயில். 'சுடர்க்கொழுந்து' என்பது ஈசனார் திருநாமம்.

ஈற்றுத் திருவிருத்தத்தில் இராவணனை அடர்த்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

இத்திருப்பதிகம் மூன்று திருவிருத்தங்களே கொண்டது எனக் கூறினும் அமையும்.

திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் இத் திருப்பதிகத்தைக் குறித்து எழுதின ஆராய்ச்சி பின் வருமாறு:—

'நமது நாயனார் அந்தணர் நிறைந்த பெண்ணாகடம் சேர்ந்தபோது மேற்கூறிய வேண்டுகோளைச் செய்த தற்குக் காரணம் ஊகித்தறிதற் பாலதே. அது சமண சமயத்திலிருந்து தான் சைவ சமயத்திற்கு வந்ததை நினைப்பூட்ட உடம்பில் வெளி அடையாளம் வேண்டுமென்று கருதினமையேயாம். அஃதின்மையால்

உடம்பைப் பார்க்கும்போது சமண சமய நினைப்புத் தோன்றித் தனது உள்ளத்தை வருத்தினது போலும். அங்குள்ள அந்தணரது அடையாளமாகிய நூலைப் பார்த்ததும் ஞானம் பெற்ற நிலையை நினைப்பூட்டுதற்கு அடையாளம் வேண்டும் என்பது தோற்றக்கூடியதே. சிவஞானிகள் மனம் புறத்தே செல்லுங் காலத்துத் திருவேடத்திலும் மெய்யன்பரிடத்திலும் இறைவனது திருவடிகள்பாலும் செல்லும் தன்மையது. அங்ஙனம் செல்லுங்காலத்து அதற்குத் தடையாய் உள்ளவற்றை விலக்குவார்கள். அவ்வாறே ஈண்டும் நமது நாயனர் சமண நினைவை யொழித்தற்பொருட்டு இவ்வேண்டு கோளைச் செய்து பயன் பெற்றார் போலும்.''

பெண்ணாகடம் அந்தணர் நிறைந்ததென்று இந்தத் தேவாரத்துக்காணோம். ஆனால் சேக்கிழார் பெருமான் திருப்பெண்ணாகடத்தை 'மறையொலி வளர்க்கும் சிருடை யந்தணர் வாழும் செழும்பதி' என்பர்.

அப்பர் திருவடிமலர் சூட்டக் கேட்டது திருச்சத்தி முற்றத்து என்று 4: 96:, திருவிருத்தத்தால் அறியலாம். அங்ஙனே திருநல்லூரில் சூட்டப்பட்டனர் என்பது 'நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்' என்ற திருநல்லூர்த் திருத்தாண்டகத்தால் அறியலாம். ஆனால் திருப்பெண்ணாகடத்து விண்ணப் பித்துக்கொண்டபடி அருளப்பெற்றமையைக் குறிக்கும் திருப்பாடல் ஒன்று காணோம். 'உயிர்வாழத் தரியேன்', 'என் ஆவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங்கூற்றகல மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேல் பொறி', 'அரும் பிணிநோய் காவாதொழியில் கலக்கும் உன்மேற்பழி' என்ற வடிகளை நோக்கின் சூலம் இடபம் ஆகியவை பொறிக்கப் படாதிருப்பின் அவர் உயிர் தரித்திரார் என்பது திண்ணம். 'மன்னுதீந் தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்தி' யிருத்தலின் இவர் விண்ணப்பம் நிறைவெய்தியது என்று ஊகிக்கலாம்.

சேக்கிழார் பெருமான் 'ஓர் சிவபூதம் மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில் சேடுயர் மூவிலைச் சூலம் சினவிடையினுடன் சாத்த' என்றமையின் தேவாரத்து அகச்சான்று வேண்டற்பாற்றன்று; குன்றை முனிவர் வாக்கொன்றேசாலும்.

இனி இடப்பக்குறி அல்லது திரிசூலக்குறி எதனான் இடப்பட்டது எனின் திருநீற்றானே இடப்பட்டதாதல் வேண்டும். என்னை?

'திரி சூலத்தாலும் திருநீ றணிவார்
ஒருவார் சிவலோகத் துற்று'

என்று 'சைவசமயநெறி' என்னும் நூலில் சிதம்பரம் மறைஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்தமையால் அறிதற்பாற்று. 'திரிசூலத்தாலும்' என்றதுள் உம்மையால் இடபக் குறியும் கொள்க.

---

வித்துவான், திரு. K. M. வெங்கட்டராமையா அவர்கள், M. A., B. O. L.,
தமிழாசிரியர், செங்கற்பட்டு.

---

ஆசாரியர் உயிராகிய என்னை அறிவென்று சொன்னார். என்னுடைய அறிவில் என்றும் ஆனந்தமாயிருப்பதைச் சிவமென்று சொன்னார். அவர் பால் விளங்கியிருக்கிற சிவத்துவத்தை நான் தரிசிக்கமாட்டாமல் என்னறிவை மறைத்து நிற்பதைப் பாசமென்று சொன்னார். இம்மூன்றன் உண்மையியல்புகளையுந் தரிசித்தவரே முத்தி பெற்றவரென்று சொல்லப் படுவார்.

—சிவபோதசாரம்.

குருபாதம்

# சைவத்திருமுறைகள்

(தருமபுர ஆதீனப் புலவர்,
வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்)

(311-ம் பக்கத் தொடர்ச்சி)

## திருமுறைகளை ஓதும் முறை

திருமுறைகள் எல்லாவற்றையும் சைவத் திருவுடையாரெல்லாரும் நாடோறும் முழுதும் ஓதக்காலம் போதாது. அதற்கு ஒரு முறை வேண்டும். இடருறு வண்ணம் அகத்திய முனிவர், அடங்கன் முறை முழுதையும் நாடோறும் ஓத இயலாது வருந்திய சிவாலய முனிவர் பொருட்டு, அவ்வடங்கன் முறையின் சாரமாகத் தேர்ந்தெடுத்த இருபத்தைந்து பதிகங்களடங்கிய அகத்தியர் தேவாரத்திரட்டை நாடோறும் ஒழுங்காக ஓதி வந்தால் அடங்கன் முறை முழுவதையும் ஓதிய சிவ புண்ணியத்தைப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வடையலாம். அத்தேவாரத்திரட்டின் அமைப்பு முறையினை ஒரு சிறிது விளக்குவாம்.

அத்தேவாரத்திரட்டு 1. குருவருள் 2. பரையின் வரலாறு 3. அஞ்செழுத்துண்மை 4. கோயிற்றிறம் 5. சிவனுருவம் 6. திருவடிகள் 7. அருச்சனை 8. அடிமை என்னும் எட்டுப் பகுதிகளையுடையது.

## 1. குருஅருள்

சிவபூசை செய்பவரும் திருமுறை ஓதுபவரும் இம்முறையைப் பின்பற்றிப் பாராயணஞ் செய்தல் சாலச் சிறந்தது. குருவிலாவித்தை பயன்படாது. அதுபோல இறைவனை வணங்கி வழுத்துவதென்றாலும் அவனருள்

வேண்டும். "அவனருளாலே அவன்ருள் வணங்கி" என்ருர் வாதவூரர். "உனதருளால் திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்" என்ருர் அப்பரும். தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலிய மூவர்களும் சிவபரம் பொருளாம் குருவின் திருவருளைப் பெற்றுப் பாடிய தோடு, கூற்று, பித்தா என்ற மூன்று பதிகங்களையும் பாடிக் குருவின் அருளைச் சிந்தித்து வழுத்துதல் வேண்டும். அவர்களை ஆட்கொண்ட பெருமான் நாமும் அப்பக்குவநிலையெய்தும் போது நம்மையும் ஆட்கொள்வாரென்பதில் ஐய முண்டோ?

## 2. பரையின் வரலாறு

பரையின் வரலாருவது சத்தியின் தன்மையாக வுள்ள திருநீற்றின் பெருமை. திருநீற்றின் பெருமை யைக்குறிக்கும் "மந்திரமாவது" என்னும் பதிகத்தை ஓதித் திருநீற்றை முறைப்படி உத்தூளனமாகவேனும் திரிபுண்டரமாகவேனும் அணிதல் வேண்டும். இத்திரு நீறு வேத உபநிடதங்களாலும் சிறப்பித்து ஓதப்படு வது. "திருநீறில்லாத நெற்றியைச் சுடு" என்று உப நிடதங் கூறுகின்றது. "நீறில்லா நெற்றி பாழ்" என் ருர் ஔவையார். "திருவெண்ணீறணியாத திருவில் ஊரும்" என்ருர் அப்பர் சுவாமிகளும். எல்லா மதத்தினருக்கும் இது ஓரளவு உண்டு. ஆனல் சைவசமயிகளுக்கே இது சிறப்பான சின்னமாக அமைந்துள்ளது. உயர்ந்த தத்துவத்தை உள்ளடக்கிக்கொண்டிருப்பது. முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பராவர் என்னும் நிலையாமை உணர்ச்சியை அளிக்குந்தகையது. உடம்பையும் உயிரையுந் தூய்மை செய்யக்கூடியது. எளிதில் எப்போதும் அணிந்து கொள்ளக்கூடியது. அது நம்முடைய பாவங்களையெல் லாம் நீருகச் செய்யவல்லது. ஒருவன் வாழ்வில் நிலை யாமை யுணர்ச்சி எப்போதும் இருந்து கொண்டே

யிருக்குமானல் அவன் இறப்பதற்கு அஞ்சான். பிறருக்குத் தீங்குசெய்ய எண்ணமாட்டான். இருப்பது பொய் இறப்பது மெய் என்ற எண்ணம் வேரூன்ற சினம், காமம், பொய் என்னுந் தீயினுக்கு இரையாகமாட்டான். வாழ்நாளின் சிறுமையினையும் அதில் தாம் செய்ய வேண்டிய நற்கருமங்களையும் உணர்ந்து அவற்றைச் செய்ய முற்படுவான். திருநீறு பூசுவார்க்கு அழகும், பெருமையும், முத்தியும், சித்தியும், அறிவும் முதலாயின வெல்லாந் தரவல்லதெனத் திருநீற்றுப் பதிகத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் ஐம்பத்தாறு முறை விதந்து கூறியுள்ளார். கூன்பாண்டியனது வெப்பு நோயை நீக்கிப் பாண்டிய நாட்டைச் சைவமாக்கியது திருநீறென்றால் இதன் பெருமையினை எளியேனல் கூறவும் முடியுமோ? உலகுக்குத் தந்தையாகிய ஈசன் தன் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறணிந்து நம்மையும் அணியச்சொல்லி வழி காட்டுகிறான். கடவுள் விரும்பும் வெண்ணீற்றை நாமும் விரும்பியணிதல் கடனன்றோ?

## 3. ஐந்தெழுத்துண்மை

மூன்றாவதாக ஐந்தெழுத்துண்மையைக் குறிக்கும் துஞ்சல், காதல், சொற்றுணை, மற்று என்ற நான்கு பதிகங்கள் அமைந்துள்ளன. முதலில் குருவருளை நினைந்து தூய்மை தரும் வெண்ணீற்றை யணிந்தபிறகு இறைவனுடைய திருப்பெயரை உச்சரித்தல் வேண்டும். அப்பெயர்தான் "நமச்சிவாய" என்னும் ஐந்தெழுத்து. அதனை வழுவாது ஓதினல் அது நமக்கு வேண்டியவற்றை அளிக்கவல்லது. மந்திரத்திற்கு ஆற்றலுண்டு. ஆசிரியர் தொல்காப்பியர் "நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரமென்ப" என்றார். "நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்" என்றார் வள்ளுவர். நிறைமொழி யென்றற்குப் பரிமேலழகர் அருளிக்கூறினும் வெகுண்டு

கூறினும் அவ்வப்பயன்களை பயந்தேவிடும் மொழி என்று பொருள் விரித்தார். இதனாலுஞ் சொல்லுக்கு ஆற்றலுண்டென்பது பெறப்படும்.

சைவசமய ஆசிரியர் நால்வரும் தம்முடைய நிறை மொழியாகிய மறைமொழியைக் கொண்டே செயற் கருஞ்செயல்கள் பல செய்துள்ளார்கள். யமனை அஞ்ச உதைத்ததும், வேதநான்கின் மெய்ப்பொருளாயிருப் பதும், ஓதுவாரை நன்னெறியிற் செலுத்துவதும், பந்த பாசம் அறுக்கவல்லதும், கற்றுணைப் பூட்டி கடலிற் பாய்ச்சினும் நற்றுணையா யிருப்பதும் "நமச்சிவாய" என்னும் மகாமந்திரமே. இதன் சிறப்பை ஓர்ந்தே மணிவாசகப்பெருமான் "நமச்சிவாய வாழ்க" எனத் தாமியற்றிய திருவாசகத்துள் முதற்கண் ஓதுவா ராயினர். திருஞானசம்பந்தப்பெருமான் "வித்தகநீறணி வார் வினைப்பகைக்கு அத்திரமாவன அஞ்செழுத் துமே" என்றருளினர். அப்பர் சுவாமிகள்

"நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே"

என்று கூறி அதன் பெருமையை விளக்கியுள்ளார்

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

எனத் திருமூலரும் அதன் பெருமையை விளக்கி யிருத் தல் காண்க "நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சி வாயவே" என்று நம்பி ஆரூரர் அருளியபடி, நாம் ஐந்தெழுத்தை ஓதப் பழகுதல்வேண்டும். ஐந்தெழுத் தின் பெருமைகளை விரிவாக உணர்த்தும் மேற்கூறிய நான்கு பதிகங்களையும், அதுபற்றிக் கூறும் பிற திரு முறைப்பாடல்களையும் ஓதி ஓதி உணர்ந்து உள்ளம் உருகுதல் வேண்டும்.

(வரும்)

திருபாதம்

# கந்தரலங்காரப் பொருட்சிறப்பு

(திரு. S. சிவபாதசுந்தரம் அவர்கள், B. A., யாழ்ப்பாணம்.)

அருணகிரிநாதருடைய பாடல்களின் இசையினிமை யாவராலும் வியக்கப்படுவது. அவர் பாடியருளிய திருப்புகழை இலங்கையிலே கல்வி, செல்வம், தொழிலாகிய இவற்றாற் பெருமைவாய்ந்திருந்த கிறிஸ்தவரொருவர் அதன் இசையினிமையை விரும்பிப் பாடத் தொடங்கி அதன் பொருளினிமையைக் கண்டு கிருஸ்தவ மதத்தைக் கைவிட்டுச் சைவராகி இருபத்தைந்து ஆண்டுகளாக இறக்கும்வரையும் சைவத் தொண்டாற்றி வேறொன்றும் செய்யாது வாழ்ந்துவந்தார். திருப்புகழைப்போலவே கந்தரலங்காரமும் மெய்ப்பொருள் நிறைந்து பொலிதலைச் சிலபாடல்கள் கொண்டு காட்டுவாம்.

பதியுண்மையை நாம் நம்புதல் பெரும்பாலும் கேள்வியினாலாம். கேள்வியால் மாத்திரம் அறியப்பட்ட ஒன்றுக்கு நிறைவான நம்பிக்கை உரிமையானதன்று. காண்டல், கருதல், உரையாகிய இவற்றுள் ஒன்றாலேனும் பலவாலேனும் பெறப்பட்டதே திடமாக நம்பத்தக்கது. உரையென்பது பதியால் அருளப்பட்டநூல். பதியுண்மையைச் சாதிக்கும் உரிமை உரையெனப் படுவதற்குப் பொருந்துவதன்று. பதியுண்மை ஐயத்துக் கிடமாகும்போது, ஒருநூல் பதியால் அருளப் பட்டதென்பது இருமடங்கு ஐயத்துக்கிடமாகும். பதியுண்மையைக் கருதலாலே சாதிக்கும் நூல்கள் பலவுள. ஆயினும், அவற்றால் ஆளப்படும் கருதல்முறை நிறைவானதன்று. கணித சாத்திரத்தில் வரும் கருதல் முறைகள் நிறைவானவைகளாதலால் அவற்றை விளக்கத்தக்கவர்கள் யாவரும் எக்காலத்தும் எவ்விடத்தும்

அவற்றாற்பெறப்படும் முடிபுகள் யாவற்றையும் தடையின்றி நம்புகின்றனர். அவர்களுள் எவராவது ஒன்றையும் மறுக்கமாட்டார்கள். பதியுண்மையை நாட்டும் கருதல் முறையை மறுக்கும் அறிவாளிகள் சிலருளர். அவர்கள் பதியுண்மையை மறுக்கின்றார்கள். ஆதலால் பதியுண்மையைச் சாதித்தல் சாலுமாயின் அது எஞ்சி நிற்பதாகிய காண்டலையே ஆதாரமாகக் கொள்ளல் வேண்டும். கந்தரலங்காரம் பதியுண்மையை இம்முறை கொண்டு சாதிக்கின்றது. அதிலுள்ள ஆறுவது பாடல் பின்வருமாறு:—

"பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னன்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே."

இப்பாடலிலே அருணகிரிநாதர், செம்மையான தேனும் அறக்கைக்கத்தக்கதாக இனிமைமிக்க ஆனந்தத்தைத் தாம் அனுபவித்தாரென்றும், அவ்வானந்தம் கடவுளை உன்னியதால் உண்டாயதென்றும் சொல்லியருளினர். இவர் பேரன்பும் பேரருளுமுடையார் என்பது கந்தரலங்காரப் பாடல்களாற் பெறப்படுதலால் அநுபவியாத ஒன்றை அநுபவித்ததாக இவர் கூறினரென்று எவரும் சொல்லமாட்டார். இன்பமொன்றை அநுபவித்தமை பிறராலும் சொல்லப் படுகிறது. "நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும், அனைத்தெலும்புண்ணெக ஆநந்தத் தேன் சொரியும், குனிப்புடையான்" என்றும், "இன்ப வெள்ளமே" என்றும் மாணிக்கவாசகர் பாடியருளினர். ஆகவே, கடவுளுண்மைக்கும் அவரையுள்ளுதலால் வரும் பரமானந்தத்துக்கும் காண்டற்பிரமாணம் கந்தரலங்காரத்தாற் பெறப்படுகின்றது.

கடவுளை உள்ளுதலாற் பெறப்படுமின்பம் உலக வின்பங்களிலும் வேறுபடுதல் அளவாலேயன்றித் தன்மையாலுமாம். ஆதலினால் அப்பரமானந்தத்தைத்

"தனிப்பரமாநந்தம்" என்றூர். ஆவின்பாலும் கள்ளிப் பாலும் பால் என்னும் இனத்தைச் சேர்ந்தவைகளா யினும் தன்மையால் மாறுபடுதல் போல, பரமாநந்த மும் உலகவின்பங்களும் தன்மையால் மாறுபடு கின்றன

"பேற்றைத் தவஞ்சற்று மில்லாத என்னைப் பிர பஞ்சமென்னும், சேற்றைக்கழிய" என்று தொடங்கும் முதற் பாடலிலே, உலகம் சேற்றை* நிகர்க்கும் என்பதும், நாம் உலகத்திலே பெறும் இன்பமானது பன்றி சேற்றிலே புரளும் போது பெறும் இன் பத்தை நிகர்க்கும் என்பதும் பெறப்படுகின்றன. தனிப்பரமாநந்தம் இருக்கத்தக்கதாக அதை நாடாமற் சேற்றிலே புரளும் இன்பத்தை நாடுதற்குக் காரணம்,

"களத்திற் பிணிபட் டசட்டுக் கிரியைக்குட் டவிக்குமென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுணர் உரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துக் வெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே"

என்னும் பாடலிற் காணலாம். அக்காரணம் உளத்திற் பிரமமாம்.

அஃதாவது உளத்தின் அறிவைக்கெடுக்கும் ஒரு பொருள். இதனை நூலோர் ஆணவம்* என்றும் மலம் என்றும் சொல்லுவர். இப்பிரமத்தின் உண்மையினு லேயே நாம் களத்திற் பிணிபடலும்† அசட்டுக் கிரியைக் குள் தவித்தலும் நேர்ந்தன. களம் என்பது மாயை. கிரியை என்பது கர்மம். மாயா கர்மங்கள் மலத்தைப் பரிபாகப்படுத்தற்கு இன்றியமையாத கருவிகளாம். உளத்திற் பிரமம் தவிருமாயின் களத்திற் பிணிபட

---

* "ஐம்புலனைய, சேற்றிலழுந்தாச் சிந்தைசெய்து" (திருவாசகம்)

* "உணரும்பான்மை தெரியாதது, இருளார்ந்தது" (திருவருட் பயன் 3-6) "மூலமலமாய் அறிவு முழுதினையும் மறைக்கும்" (சிவப்பிரகாசம் 2-2)

† "மலத்துளதாம்" (சிவஞானபோதம், க சூத்.)

னும் அசட்டுக்கிரியையும் தவிர்ந்துபோம். ஆதலால், இவற்றைத்தவிர்க்குமாறு வேண்டாமல் உளத்திற் பிரமத்தைத் தவிர்த்தலையே வேண்டுகின்றார்.

இந்த உளத்திற் பிரமத்தைத் தவிர்த்தற்கு வேண்டப்படும் முதற்சாதனம்,

"அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும் அவிழ்ந்தஅன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டும் கொடியஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
இராப்பக லற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே"

என்னும் பாடலில் முதற்கண் உள்ளது. ஆணவ நீக்கத்துக்குக் குமரக்கடவுளது திருவருளே மூல சாதனமாம். அவருடைய திருவருளின்றிக் கணப்பொழுதேனும் நாம் வாழுதல் சாலாதாதலால், †அது எமக்கு என்றும் உளதாக, அதை நாம் பெறவேண்டுமென்றல் எவ்வாறு பொருந்துமெனில், இங்கே அருள் என்றது சத்திநி பாதத்துக்கேதுவாகிய சிறப்பு வகையான அருளையாம். அதைப் பெறும் முறைமை பின் வரும் பாடலில் உள்ளது:-

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படியிருங் கோள்எழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே.

இதிலடங்கிய பொருள்:-(1) மனத்திலே தீய ஆசைகள் எழும்போது அவற்றைத்தடுத்து, பிறவுயிர்களைத் துன்பப்படுத்தற்கேதுவாகிய வெகுளியை முற்றாகக் கைவிட்டு, (2) உயிர்களுக்கு எப்பொழுதும் நன்மையானவற்றைச்செய்து (3) இன்பதுன்பங்களாலே தாக்கப்படாமல் மனம் சலனமற்றிருக்குமானல், குமாரக் கடவுளுடைய சிறப்புவகையான திருவருள் தானக வருமென்பது. (வரும்)

† "ஆண்ட நீ அருளிலையானல் வார்கடலுலகில் வாழ்கிலேன்" (திருவாசகம்-வாழாப்பத்து)

குருபாதம்

# முப்பொருள்

[வித்துவான், தருமபுர ஆதீனப் புலவர்,
திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்,
விரிவுரையாளர், திருவையாறு.]

(292-ம் பக்கத்தொடர்ச்சி.)

இறைவன் ஐந்தொழில்களைப் புரியுங்கால் ஒன்பது வகை வடிவுற்று விளங்குவான். பிரமன், அரி, உருத்திரன், ஈசன் ஆய நான்கும் நிலைமருவும் உருவமாகும் விந்து, நாதம், சத்தி, சிவம் நான்கும் அருவமாகும். சதாசிவமாகிய இலிங்கம் அருவுருவமாகும் பின்வரும் சிவஞானதீபச் செய்யுளும் சிவபோகசாரச் செய்யுளும் கொண்டு ஒருவாறு அமைக. அச்செய்யுள் வருமாறு:—

பிரமனரி யுருத்திரனே டீசனுங்கும்
    பெருகுதிர நிலைமருவு முருவமாகும்
பரவரிய விந்துவுட னாதமீதிற்
    பரைபரம சிவமெனவே பகர்ந்தநான்கு
மருவநிலை யாமுபய கூட்டந்தானே
    யருணிலவு மிலிங்கசதா சிவமதாகு
முருவமதிற் சிருட்டிதிதி யுபயர்தன்னி
    னொடுக்கிடுவ னருவத்தா லனைத்துமேகன்.

அவ்வுயிர்போ லெவ்வுயிர்க்கு மறிவாகி நிறைந்தே
    யானந்த சுகாதீதத் தப்புறத் தப்புறமா
யிவ்வுருவ மிதுநிலய மிதுவெனுஞ் சுட்டிலதா
    யேகமா யாதிநடு வீறகன்ற முதலா
யெவ்வெவரெப் படிநினைந்தா ரவ்வவர்க் கப்பொருளா
    யெண்ணுமன பாவகத்தா னண்ணரிய வொளியா
யொவ்வியசித் துடனசித்து மல்லதுவா யுற்ற
    வுருவருவ முபயமகன் றுளதாகும் பதியே.

—சிவஞானதீபம்.

மனம்வாக்குக் காயமுயிர் மன்னியசைப் பானும்
மனமாதி போகமளிப் பானும்--சனவாதி
கூட்டிவிடு வானுமுத்தி கூட்டிடுவா னும்பிறப்பில்
ஆட்டிவிடு வானு மான். —சிவபோகசாரம்.

**2-வது உயிர்ப்பொருளாகிய பசுப்பொருள்:-** உயிர்த்தலானும் உணர்வுடைமையானும் உயிர்எனவும், பாசங்களாற் கட்டுண்டிருத்தலின் பசுவெனவும் காரணங் கற்பிப்பர். இவ்வுயிர்கள் நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, 84நூறாயிரயோனி பேதங்களையுடையனவாயிருக்கும். பதியாகிய இறைப் பொருளுண்மை யுணர்த்தவந்த **மெய்கண்டதேவ நாயனார்** உலகம் என்பது. மாயகாரியமாயுள்ளது. உடல், பொறி, உலகம், நுகர்வு (தனு, கரணம், புவனம், போகம்) ஆகக்கரணப்படுவது. காரியமாகிய இவ்வுலகிற்குக் காரணமாயுள்ள மாயையானது, சுத்தமாயை அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை என மூவகைப்படும். மாயையானது மூவகைப்படவே அவற்றின் செயலாகிய உலகம் மூவகைப்படும். அம்மூவகை யுலகினையும் அழிப்பவனாகிய பெரும்பெயர் இயவுளையே ஈண்டு உலகிற்கு முதற்கடவுள் என்றுரைக்கப்பட்டதாகும். அக்கடவுளே பரசிவன் எனும் பெயருடையவன் எனக் கூறியருளினார்.

அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி யென்மனார் புலவர்.

என்பதாம். அங்ஙனமாகிய உலகமானது, உயிரில் பொருளும், உயிருள்பொருளும் ஆக இருவகையாகக் காணப்படுதலின் ஈண்டு உயிர் **உள்பொருளெனப் படும்.** அங்ஙனம் உள்பொருளெனப்படும் உயிர்களாகிய பசுக்களின் உண்மையைச் சிவஞானபோத மூன்றாம் சூத்திரம் செப்பும். யார்பொருட்டுக் கடவுள் உலகத்தை முத்தொழிற்படுத்துகின்றாரோ அவர்களே

பசுக்கள். அப்பசுக்கள் எண்ணிலாதவர்களாய், என்று முள்ளவர்களாய், பண்டு தொடங்கியே பாசமுடைய வர்களாய், அம்மலத்தாற் றடுக்கப்பட்ட அறிவு இச்சை தொழிகள் உடையவர்களாய் ஒன்றைச் சார்ந்தே அறிபவர்களாய் உள்ளவர்கள். இவற்றினைப்பற்றிய சில மேற்கோள்களை யீண்டுத் தருகுதும்.

மூவகை யெனுந்தளை மூழ்கி யுற்றிடும்
ஆவிகள் உவப்பில அநாதி யுள்ளன
தீவினை நல்வினைத் திறத்தின் வன்மையால்
ஓவற முறைமுறை யுதித்து மாயுமே.

—கந்தபுராணம்

மூலமா மலத்தா லன்றே மூடபே ரறிவதாகிச்
சீலமா யையினாற் றோன்றுஞ் சிற்றறி வுடையதாகி
மேலைநாள் வினையாற் றோற்றம் விளிவுடைத் தாகிவானம்
போலவே யடுத்த தாகிப் புணர்வது பசுவின் றன்மை.

—கூவப்புராணம்

பஞ்சபூதங்க ளன்று பகருஞா னேந்தி யங்கள்
அஞ்சுமன் றுரைத்த கன்மேந் தியங்களோ ரைந்து மன்றும்
எஞ்சலில் சத்தமாதி வாக்காதி யிவைக ளன்று
செஞ்சவே மனுதி யன்று திகழுமவ் வியத்த மன்றே.

உழிதரு பிராண னன்று கருத்தனன் றுண்போ னன்று
தழைபிர இருதி யன்று புருடனு மன்று சால
விழைவுறு மாயை யன்று விளங்கிய வான்மா யாரும்
தொழுதகு மறைகள் எத்துஞ் சுத்தசை தனிய மாமால்.

—கூர்மபுராணம்

செப்பருமா ருயிர்வருக்க மளப்பரிதா யென்றுஞ்
செறிதருமா ணவவிருளா லனுதிமறைப் புளதாய்த்
தப்பரிய விருவினையின் றுய்ப்பதனுக் கிசைந்த
தனுவாதி விதமாயை தாவவற்றைப் பொருந்தி
யப்பரிசே யுயர்திணையோ டஃறிணையாய் விரிந்தே
யருநிரயஞ் சுவர்க்கமில மிசையிதமோ டகித
மெய்ப்புறநின் றருந்தியல மருமிறைவ னருளா
லிருவினையொத் திடிலரிய பாபதமுற் றிடுமே.

—சிவஞானதீபம்

**பாசப்பொருளாகிய கட்டுப்பொருள்:-** அஃதாவது உயிர்கள் பதிப்பொருளாகிய இறையை அறியவொண்ணாதபடி மறைத்து நிற்பது. கட்டு, பந்தம், தளை, பாசம், தொடக்கு, மலம், அழுக்கு, மாயை என்பன ஒரு பொருட் கிளவிகளாம். (கிளவி-சொல்) இப் பெயர்ப் பொருளைத் தனியாக ஆராயின் இக்கட்டிலக்கணம் நன்கு இனிது புலனாகும். இப்பாசம் மூன்றாகவும் ஐந்தாகவும் வகுக்கப்படும். அவையாவன:— ஆணவம், கன்மம், மாயை, திரோதம், மாயேயம் என்பனவாம். திரோதம், மாயேயம் இரண்டினையும் மாயையுட்படுத்து வழங்குவர். இவற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

ஆணவந் றிரோதாயி மாயேய மாயை
யரியவிரு வினைக்கன்ம மாமலமைந் தவற்றி
ஞணவமஞ் ஞானவிருள் குடிலைசிவன் முதலா
மைவருக்குந் தனுவாகி யைந்தொழிலு மியற்றும்
பூணுலவு கலாதியுடன் றனுமுதனல் வகையும்
புகல்சகலர்க் களித்து நடத்திடு மசுத்தமாயை
மாணவிரு வினைப்பயனாந் துக்கசுகங் கன்ம
மலபாக முயிர்க்குதவுந் திரோதையருள் வடிவே"
—சிவஞான தீபம்.

**ஆணவமலத்தின் இயலாவது:-**

(1) உயிர்கட்குரிய எத்துன்பத்தை நீக்கக்கருதிக் கடவுளானவர் உலகினை முத்தொழிற் படுத்துகின்றனரோ அத்துன்பத்திற்குக் காரணமாயுள்ளது. அது செம்பில் களிம்பு போன்று உயிர்களைப் பண்டுதொடங்கியே பந்தித்துள்ளது. அஃதொன்றாயிருந்தும் எண்ணற்ற வுயிர்களை மயக்குவது. உயிர்கட்குத் தீய எண்ணங்களைத் தந்து அவர்கள் அறிவைக் கெடுப்பது. செவ்வியுற்ற வுயிர்கடோறும் நீங்கும் வல்லமைகளையுடையது. இதற்குச்செய்யுள்:-

"ஏகமாய்த் தங்கால வெல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருளொளிர விருண்ட

மோகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாயறிவு முழுதினையு மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வாது பரிந்து
நாகமா நதிமதியம் பொதிசடையா னடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்குந் தானே''

(2) **கன்ம மலம்:-** உயிர்கட்குப் பண்டே **இறையின்** தொடர்பால் நல்வினையும், ஆணவமலத் தொடர்பாலும் அதனால் தம்மிடத்துக் கலந்திருக்கும் கடவுளை அறியாமையாலும் தீவினையும் உள. இவையே இருவினைப் படும். இவற்றிற்குக் கன்மமலம் எனவும் பெயராம். கன்ம மலமானது ஆணவமல (சத்தி) வலிவகையால் பலவகைப்படும். அதுவே, உயிர்கட்குப் பலவகையான உடலங்களுக்குக் காரணமாயிருப்பது. செய்யுள்:-

''நண்ணியிடு முருவதனுக் கேது வாகி
நானுபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரு மாதலால் அநாதி யாகிப்
பலவாகி யணுக்கடொறும் படர்வ தாகி
எண்ணவரு மனவாச கன்மத்தா லியற்றும்
இயல்பினதாய் மதிகதமாய் இருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலு மாறே''

**மாயை:-** அஃதாவது ஆணவமலத்தாற் கட்டப்பட்ட உயிர்கள் உறைவதற்கு இடமாய் இருப்பது (உள்ளது) வேயாம். மாயை தன் காரியங்களால் உயிர்கட்குரிய உடல், பொறி, உலகு, நுகர்வுகளாய் அமைந்து (தனு கரண புவன போகங்களாய்) அவர்களின், அறிவு இச்சை செயல்களை விளக்கும். ஆனால், அதனால் ஆகும் சிறிதிட (ஏகதேச) விளக்கமாகையால், அஃதுயிர்கட்கு மயக்க விளக்கமாகும். மயக்கமாவது பொய்யை மெய்யாய் விளக்குவது முதலியனவாகும். இதற்குச் செய்யுள் வருமாறு:-

"உருவாதி சதுவிதமா யொன்றொன் றொவ்வா
வுண்மையதாய் நித்தமா யொன்று யென்றும்
அருவாகிக் கன்மமா ரணுக்கள் யார்க்கு
மாவாரமா யசித்தா யசல மாகி
விரிவாய தன்செயலின் வியாபியா யெல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை யொடுங்க
வருகால முயிர்களெல்லா மருவிடமாய் மலமாய்
மன்னியிடு மரன்அருளான் மாயை தானே"

மாயை சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என மூவகை யாயிருக்கும்.

**திரோதமலம்:-** அஃதாவது உயிர்கட்குரிய வினைகளுக்கீடாய் உடல் முதலியவற்றினை யுதவி கன்மமலங்களை யுருசிப்பித்து அவைகளை அருந்தும் படிச் செய்து ஆணவமலவலியை அழித்து அவைகளை இறைவனிடத்தில் சேர்ப்பிக்கிறது எதுவோ அதுவே திரோதான சத்தியாம். திரோதமலத்திற்குச் செய்யுள்,

"திரோதமல மிறைசத்தியான்ஆணவகன்மஞ் சேரு
மளவாகி மலச்செறிவு நீங்களவும்
விரோதமுறை போலொக்க மறைப்பாக நின்று
மிக்கதுதான் மிகுமாயை விரித்தறிவு பொருந்தி
வரோதயமாம் வேதங்கள் பலகலைக ளாய்ந்து
வரினுமறி யாதவகை நிரவுமதனுலிப்
பராவருளை மலமெனவும் பகர்வ ரதுதானே
பிரமனையுங் கருணையினுற் றெரிவுறப் பண்ணிடுமே."

**மாயேயம்:-** அஃதாவது மாயையின் செயல்களே (காரியங்களே) மாயேயம் ஆம். "மோகமிக வுயிர்கடோறும் உடனுய் நிற்கும்" என்ற சிவப்பிரகாசச் செய்யுளான் அவற்றின் இயல்புகளை நன்கறிந்து கொள்ளலாம். இதுகாறும் முப்பொருளியலினை யொருவாறு சிறிது செப்பினேம். **பதி—நிறைவு** (வியாபகம்) **பசு—வியாத்தம், பாசம்—வியாப்பியம்.** (கடல்-வியாபகம், நீர்-வியாத்தம், உப்பு-வியாப்பியம்.) அவற்றிற்

கெடுத்துக்காட்டாக வமைத்து தொடர்புபடுத்திக்கோடற் பாற்றும். இவற்றின் பரப்பினைச் சித்தாந்தக் கலைகளிற் பரக்கக்காண்க. இக்கட்டுக்களானே உயிர்கள் ஒரு மல முடையர், இருமலமுடையர், மும்மலமுடையர் (விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர்) எனப் பெயர் பெறுவார்.

இவர்கள் தவநெறியினும் ஞானநெறியினும் நின்று வழுவாது ஒழுகற்பாலராவர். சரியை, கிரியை, யோகம் இம்மூன்றும் தவநெறியாம். ஞானநெறியே சன்மார்க்க மாம். இதனைப் பின்வருமாறு காண்க.

> நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
> நல்லசிவ ஞானத்தால் நானழிய—வல்லதுதான்
> ஆரேனு மன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
> ஆரேனுங் காணு வரன்.

என்பது திருக்களிற்றுப்படியார்.

மக்களுடல் உற்ற வுயிர்கட்கே நாற்பொருளு மடை தற் குரித்தாகும். நாற்பொருளி னிறுதியதாகிய வீடடை தற்குரிய நெறியினையே நாடல் வேண்டும். மக்களாவார் இயல்பாகவே கட்டுடையராயிருத்தலின் அக்கட்டினைத் தொலைக்க, வலிகுலைய முயறல் வேண்டும். அங்ஙன முயலுவதற்கு முன்னர் தீட்சையாதியன முயன்று பெற்று நல்லொழுக்க நெறிநின்றுவரல் வேண்டும். அங்ஙனம் வருவாராயின், எள்ளுறு எண்ணெயென்ன எங்கு நிறைந்த இறைவன் கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி மானைக்காட்டி மானைப்பிடித்தலை யொப்ப மக்கட்சட்டகந்தாங்கி யெழுந்தருளி குருவுரு வுற்று, இறைநிலை உயிர்நிலை பாசநிலைகளை முற்ற வுணர்த்தியருளுவன். நல்லாசிரியரை நண்ணி யவரருளிய மறையினை (மந்திர மொழியினை)க் கூறியாங்குக் கடைப் பிடித்தொழுகின் அழிவுடைமை அழியாமையுடைமைப் பொருள்களின் நிலைமையினை நன்கறிந்து நல்லன கடைப்பிடித்தொழுக வாய்ப்பேற்படும்.

"அங்கையினைவிரல் அஞ்செழுத்துமே"

எனும்பதிகமும்,

"கைம்மலர்க் காட்சியிற் கதுவநல்கிய
செம்மலே யலதுளஞ் சிந்தியாதரோ."

எனும் தோத்திரமும் இதனை வற்புறுத்தா நிற்கும். நம்மணிவாசகப் பெருந்தகையார் அருளிய திருப்பாட்டினையும் நன்கு நுனித்தறிதல் வேண்டும்.

'பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கிலாததோர் இன்பமேவரும் துன்பமே துடைத்தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல் விளையாமலென் வினையொத்தபின்
கணக்கிலாத் திருக்கோல நீவந்து காட்டினாய்க் கழுக்குன்றிலே."

உயிர்களும் பிராரத்த ஆகாமிய சஞ்சித வினைபோமாறும், இருவினையொப்பு வருமாறும், ஆண்டவன் அணைந்தருள் புரியுமாறும் எங்ஙனம் எடுத்தியம்பப் பெற்றுள்ளது. இறை, வலி, உயிர், கட்டு (சிவம், சத்தி, உயிர், கட்டு) என்பனவற்றை யுணரும் உயிர்கள் பாசவறிவு பசுவறிவு கழலப்பெறின் பதிஞானமாகிய இறையறிவு கைவரப்பெறுகின்றன. அதுவே வீடுபேறடைவிக்கின்றது. பசு பாச ஞானத்தா லறியப் படாமையின் சிவமெனவும், பதிஞானத்தால் அறியப் படுதலின் சத்து எனவும் சொல்லப்படுவதே சிவசத்தாம். இங்ஙனமாகிய சிவசத்தினை யவனருளானே யடையவேண்டியிருக்கின்றது.

"மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலே யலதுளஞ் சிந்தியா தரோ."

# Saiva Siddhantha - The Ambrosia

The man in the lowest rung has in no way caught any glimpse of the highest light. He in fact would not recognize any such light. It is part of the same structure and the structure is not a mechanical one. Kumara Gurupara-Swamigal gives a beautiful illustration of this in his *Pandara Mummani Kovai.*

The Tree and its parts, all useful, an organic whole.

முற்படு மாயை முதற்கரை நாட்டிற்
பற்பல புவனப் பகுதி பற்றி
யீரிரு கண்ணுற் றெழுதரம் வகுத்த
வாறே ழிரட்டி நூறு யிரத்த
செயற்படு செய்களி னுயிர்ப்பயி ரேற்றி
யூழெனப் பட்ட தாழ்புனற் படுகரிற்
றெய்விக முதலாச் செப்புமும் மதகும்
ஒவ்வொரு மதகா யுடனுடன் றிறந்து
தாக மென்னுந் தனிப்பெருங் காலிற்
போக மென்னும் புதுப்புனல் கொணர்ந்து
பாயுமைம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வரன்முறை தேக்கலும்
இதத்துட னகித மெனுமிரண் டேற்றிற்
புதுப்புனல் பெருகிப் புறம்பலைத் தோட
வார்புன லதனை மந்திர முதலா
வோராறு வகைப்படு மேரிக ணிரப்பி
விளைவன விளைய விளைத்தன வறுத்தாங்
கொருகளஞ் செய்யு முழவ னாகி
மாநிலம் புரக்கு மாசிலா மணி
ஞானசம் பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தா னம்பி நீயே.

பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை யென்னுந் தடவய னாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதபம் வளர்த்தனை
பாதப மதனிற் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண்டுவந்தனர் பலரே; யிலையொரீஇத்
தளிர்கொண்டுவந்தனர் பலரே; தளிரொரீஇ
யரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
யவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
வோரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே யானவர்
தன்னிலை பெறுதற் கன்னிய னாயினு
மன்னவர் கமலப் பொன்னடி விளக்கிய
தீம்புன லமுத மார்ந்தன னதனால்
வேம்பெனக் கொண்டனன் விண்ணவ ரமுதே.

"In that primeval land of ancient Maya
whence the various worlds were evolved
were divisions and subdivisions
made of four, and seven, and 82 lacs
In fields so divided been sown the seeds of life
From the deep waters of Karma,
and through the three sluices of
Adi Deivikam, &c., was the water of Bhoga drawn
in the channel of Desire (Thrishna Tanha)
and led at the proper time through the gates
of the five senses.
Then from the springs of pleasure and pain,
did the waters flood and overflow
into the 6 tanks of mantra etc., [grew
Thus didst thou, become the husbandman who

and reaped the crops and protect
the world, O Masilamani!
O Gnana Sambantha! Gnana Desika!
Thus didst thou, O beneficient Lord!
intending the salvation of countless souls,
out of thy abiding love, plant the seed
of love in the field of kudelai (Pranava)
and water it with thy grace, and produce
the Tree of Veda From this tree
were derived various benefits by various people;

of these,

"Some took the leaves, others took the sprigs, rejecting the leaves; others again rejecting these, took the bud, flower, tender fruit and green ones, as each one desired. Proving useful as they did these six parts of the tree, few were they who chose the ripened fruit, sweet and rare, growing on the top of Vedanta, and pressed the juice called Saiva Siddhanta and drank such ambrosia. Myself, though unfit to share their bliss, have drunk the sweet water from the wash of their golden feet. Hence I regard as bitter the ambrosia of the Gods."

*Extract from S. D.*

கட்டையில் நெருப்பும், நெருப்பில் நீரும், தேனிற் சுவையும், பூவில் மணமும், வானிற் காற்றும், கண்ணில் ஒளியும் என்றும் அத்துவிதமாய் நிற்றல்போல முத்தியில் ஆன்மாவும் ஈசனும் அத்துவிதமாய் நிற்பர்.

—சிவபோகசாரம்.

## திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்
## தேவஸ்தானங்களில் நவராத்திரி உற்சவத்தில் நடைபெற்ற

# சமயப் பிரசாரங்கள்

**வேளூர்** ஸ்ரீவைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 19–9–43 தருமபுர ஆதீன சைவப் பிரசாரகர் திரு. **மீ. சுந்தரம் பிள்ளை** அவர்க "முத்துக்குமரன் அருட்டிறம்" என்பதுபற்றியும், 4, 5—10— ஆகிய இருநாட்களில் முறையே திருவாரூர் தருமபுர ஆதீனத் தமிழ் புலவர், வித்துவான் திரு. **ச. தண்டபாணி தேசிகர்** அவர்கள் "கந் கலிவெண்பா" என்பதுபற்றியும், சென்னை தருமபுர ஆதீனத் தமிழ் புலவர், வித்துவான் திரு. **குஞ்சிதபாதம் பிள்ளை** அவர்கள் "அன்ப ஆட்கொண்ட அதிசயம்" என்பதுபற்றியும் சொற்பொழிவாற் றினார்கள். 16—10—43 கிருத்திகைத் திருநாளன்று சீகாழி வித்துவா திரு. **D. சுந்தரேச ஆசாரியார்** அவர்கள் "தீராநோய் தீர்த்தரு வல்லான்" என்பதுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

**சீகாழி** ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் வித் வான் திரு. **ச. தண்டபாணி தேசிகர்** அவர்கள், நாகை தரும ஆதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான் திரு. **வை. மு. சண்முக தே** அவர்கள் ஆகிய இருவர்களும் 3, 4—10—43 ஆகிய இருநா களிலும் முறையே "காழித் திருவிசைப்பா" "சேக்கிழார் கண் சீகாழி" என்னும் பொருள்கள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்க

**குத்தாலம்** ஸ்ரீ உக்தவேதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 4—10—43 ஆகிய இருநாட்களிலும் "எட்டாந் திருமுறை" "ஆ திருமுறை" என்னும் பொருள்கள்பற்றி ஆதீனப் பிரசாரகர் தி **மீ. சுந்தரம் பிள்ளை** அவர்களும், வித்துவான் திரு. **வை. குஞ்சிதபா பிள்ளை** அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

**மாயூரம் வள்ளலார் கோயில்** ஸ்ரீ வதான்யேசுவர சுவா தேவஸ்தானத்தில் 4—10—43 ல் "சிவமும் சக்தியும்" என்னு பொருள்பற்றிச் தருமபுர ஆதீன வேதசிவாகம பாடசாலை ஆசிரிய சிவத்திரு. **S. சுவாமிநாத சிவாசாரியார்** அவர்களைக்கொண்டு சொ பொழிவு நிகழ்த்துவிக்கப்பெற்றது.

**மாயூரம் குமரக்கட்டளை** ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவ தானத்தில் 13—10—43ல் சிவத்திரு. **S. சுவாமிநாத சிவாசாரியார்** அவ களைக்கொண்டு "சிவலிங்க பேதங்கள்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவிக்கப்பெற்றது.

**திருபுவனம்** ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தி –10—43ல் திருவையாறு தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர், வி ன் திரு. **இராம. கோவிந்தசாமி பிள்ளை** அவர்கள் "பெரிய அன் தணதேவர்" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்க